வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 26.1.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் 77 ஆவது குடியரசு தின விழா இன்று நாடு முழுவதும் கோலகலமாக கொண்டாடப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லி தேசிய போர் நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

கல்விக்கும், அனுபவத்திற்கும் இடையே ஒரு பாலமாக பிரதமரின் பயிற்சி திட்டம் அமைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஹர்ஷ் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

இந்திய அளவில் சிறப்பாக நிர்வாகம் செய்யப்படும் மாநிலங்களில் ஒன்றாக புதுச்சேரி திகழ்வதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

குடியரசு தின விழா 1 (6)

நாட்டின் 77 ஆவது குடியரசு தின விழா இன்று நாடு முழுவதும் கோலகலமாக கொண்டாடப்பட்டது. குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு புதுடெல்லியில் உள்ள கடமைப் பாதையில் தேசிய கொடியை ஏற்றி வைத்து, முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். பாரம்பரிய வழக்கப்படி, தேசியக் கொடி வானில பறக்க விடப்பட்டபோது, 21 குண்டுகள் முழங்க, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. இது குறித்த கூடுதல் தகவல்கள்,............

(வாய்ஸ்)

குடியரசு தின விழா 2 (16)

(வாய்ஸ்)

சுதந்திரத்தின் மந்திரம் வந்தே மாதரம் மற்றும் வளமையின் மந்திரம் தற்சார்பு இந்தியா எனும் கருப்பொருளில் கொண்டாடப்பட்ட நாட்டின் 77 ஆவது குடியரசு தின விழாவில், சிறப்பு விருந்தினர்களாக ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு அந்தோனியோ கோஸ்ட்டா, மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவி திருமதி உசுலா வாண்டர் லேயன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி புதுடெல்லியில் உள்ள போர் நினைவு சின்னத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈர்ந்த வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பின்னர் குடியரசு தின விழாவில் கலந்து கொண்டார். தொடர்ந்து, முப்படையினரின் பிரமாண்ட அணிவகுப்பு நடைபெற்றது. இதில், ஐரோப்பிய யூனியனை சேர்ந்த ராணுவ வீரர்களும் அணிவகுத்து வந்தனர். இந்திய ராணுவத்தின் வலிமையை பறைசாற்றும் வகையில், ஆபரேஷன் சிந்தூரின் போது பயன்படுத்தப்பட்ட பிரமோஸ், ஆகாஷ் ஏவுகணைகள், நவீன ஆயுதங்கள், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தேஜஸ் விமானங்களும் அணிவகுப்பில் இடம் பெற்றன. பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை

குடியரசு தின விழா 3 (9)

பிரதிபலிக்கும் வகையில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இருந்து முதன் முறையாக இந்த ஆண்டு அலங்கார ஊர்தி குடியரசு தின விழாவில் பங்கு பெற்றது குறிப்பிடத் தக்கது. அணிவகுப்பின் நிறைவாக வான் சாகச நிகழ்ச்சியில் இந்திய விமானப்படையை சேர்ந்த 29 விமானங்கள் வான் மண்டலத்தை வண்ணங்களால் அலங்கரித்தன. இவ்விழாவில் முக்கிய நிகழ்வாக சர்வதேச விண்வெளி மையம் சென்ற முதல் இந்தியரான விமானப்படை குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவிற்கு

அசோகா சக்ரா விருதினை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வழங்கி கவுரவித்தார்.

*பிரகதி-1 (10)*

உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில் தடைகளைக் களைந்து பணிகளை துரிதமாக நிறைவேற்றி முடிக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட பிரகதி டிஜிட்டல் வசதி, உயர்நிலை தலையீடு மூலம் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. பிரகதி மறுஆய்வு மூலம் திறம்பட்ட முறையில் திறம்பட்ட முறையில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட முக்கிய திட்டங்களில் ஒன்றான, மகராஷ்டிர மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள நேருல்-பேலாப்பூர்-உரான் ரயில்பாதை குறித்த ஒரு தொகுப்பு......

(வாய்ஸ்)

*பிரகதி-2 (18)*

(வாய்ஸ்)

நெருள்-பெலாபூர்-உரான் ரயில் பாதை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த புறநகர் ரயில் உள்கட்டமைப்பு திட்டமாகும். இந்த திட்டம் ரயில்வே அமைச்சகத்தால், 2 ஆயிரத்து 800 கோடி ரூபாய்க்கும் அதிகமான திருத்தப்பட்ட திட்ட செலவில் நிதியுதவி செய்யப்பட்டது. இத்திட்டத்தில் வனம் மற்றும் சதுப்பு நில அனுமதி, நிலம் கையகப்படுத்துதல், வழித்தட அனுமதி மற்றும் பயன்பாட்டு வசதிகளை மாற்றுதல் மற்றும் தொழில்துறை மேம்பாட்டு கழகத்துடன் நிதி ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல சட்டபூர்வ தேவைகள் அடங்கியிருந்தன. இந்த சிக்கல்கள் அனைத்தும் பிரகதி வழிமுறையின் கீழ், 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் தேதி, ஒருகட்டமைக்கப்பட்ட ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. பிரதமர் திரு நரேந்திர மோடியின் வழிகாட்டுதலின்படி, ரயில்வே அமைச்சகம், மகராஷ்டிரா மாநில அரசின் வனத்துறை மற்றும் மாவட்ட நிர்வாகங்களை ஒன்றிணைத்து நிர்வாக கட்டமைப்பு செயல்படுத்தப்பட்டு முதல் கட்டமாக

நெருள் – பெலாபூர் பாதை கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிக்கப்பட்டது. தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக ஊரான் ரயில்பாதை கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முடிக்கப்பட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டது.

*பயிற்சிதிட்டம் பிஎம்* (11)

நாடு முழுவதிலும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிரதமரின் பயிற்சி திட்ட பயிற்சியாளர்களுக்காக மத்திய அரசு புதுடெல்லியில் 3 நாள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. முன்னதாக அவர்கள் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து, மத்திய அமைச்சர் திரு ஹர்ஷ் மல்ஹோத்ராவுடன் கலந்துரையாடி, தங்களின் அனுபவங்கள், மற்றும் இந்த பயிற்சி திட்டம் குறித்த தங்களின் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து பேசிய மத்திய அமைச்சர் திரு மல்ஹோத்ரா, இந்தியாவின் இளைஞர்களை மேம்படுத்தும் வகையில் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தவும், கல்விக்கும், அனுபவத்திற்கும் இடையே ஒரு பாலமாக இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

*புதுச்சேரி குடியரசு தினம் -1* (19)

குடியரசு தினத்தை முன்னிட்டு புதுச்சேரி கடற்கரை சாலையில் நடைபெற்ற விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல் துறையினரின் பல்வேறு பிரிவினர், என்சிசி மாணவர்கள் உள்ளிட்ட பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இவ்விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சபாநாயகர் திரு செல்வம், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயலாளர், காவல் துறை தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் போது, குடியரசு தலைவரின் காவல் பதக்கம், மத்திய உள்துறை அமைச்சரின் காவல் பதக்கம், துணை நிலை ஆளுநரின் காவல் பதக்கம் உள்ளிட்ட பல்வேறு பதக்கங்கள் மற்றும்

பாரட்டு சான்றிதழ்கள் காவல் துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு வழங்கப்பட்டது. இதேபோல், பள்ளி இறுதி தேர்வுகளில் சாதனை புரிந்த பள்ளிகளுக்கு முதலமைச்சரின் சுழற்கேடயங்கள் மற்றும் நினைவு பரிசுகளை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வழங்கினார். முன்னதாக, பல்வேறு அரசு துறைகளின் அலங்கார ஊர்திகளின் ஊர்வலம் நடைபெற்றது. தொடர்ந்து பள்ளி மாணவ-மாணவிகளின் கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. விழாவில் துணை நிலை ஆளுநர் ஆற்றிய உரை குறித்த கூடுதல் தகவல்கள்........ (வாய்ஸ்)

*புதுச்சேரி குடியரசு தினம் -1* (17)

(வாய்ஸ்)

பாரத பிரதமரின் விவசாயிகளுக்கான நிதி உதவி திட்டத்தின் மூலம், புதுச்சேரியை சேர்ந்த 5 ஆயிரத்து 435 விவசாயிகளுக்கு 1 கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி உதவிவழங்கப்பட்டுள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார். குடியரசு தின விழாவில் உரையாற்றிய அவர், மாநில அரசின் வீட்டு வசதி திட்டங்கள், மத்திய அரசின் பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தோடு இணைக்கப்பட்டு, ஏழை எளிய மக்களின் வீடு கட்டும் கனவை நனவாக்கும் விதமாக பொதுப்பிரிவினருக்கு 6.2 லட்சம் ரூபாயாகவும், அட்டவணை இனத்தவருக்கு, 7 லட்சம் ரூபாயாகவும் மானியத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார். இந்திய அளவில் சிறப்பாக நிர்வாகம் செய்யப்படும் மாநிலங்களில் ஒன்றாக புதுச்சேரி திகழ்வதாகவும், பல்வேறு அரசுத் துறைகளில் காலியாக இருந்த சுமார் 4 ஆயிரம் பணியிடங்கள் நிரப்ப பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர், ஆயிரத்து 200 பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு, 500 பணியிடங்களை நிரப்புவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். சுயதொழில் தொடங்க உள்ள இளைஞர்களுக்கு தொழில் பயிற்சிகள், திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

காரைக்கால் – ஏனாம் (16)

குடியரசு தின விழாவை முன்னிட்டு காரைக்காலில் நடைபெற்ற விழாவில், மாவட்ட ஆட்சியர் திரு ரவி பிரகாஷ் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். வழக்கமாக காரைக்கால் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் குடியரசு தின விழா இந்தாண்டு மழையின் காரணமாக சர்தார் வல்லபாய் பட்டேல் சாலைக்கு மாற்றப்பட்டது.

ஏனாமில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், மண்டல நிர்வாகி திரு அங்கித் குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். ஜிஎம்சி பாலயோகி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இந்த விழாவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கொள்ளப்பள்ளி ஸ்ரீநிவாச அசோக் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தில் நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியில் நிகழ்ச்சி பிரிவு தலைவர் திரு.மயிலாடுதுறை த. செந்தில்குமார் தேசிய கொடியை பறக்க விட்டார். விழாவில் நிலைய பொறியியல் பிரிவு மற்றும் நிர்வாகத் தலைவருமான திரு. ரவி மாரியப்பன், செய்திப் பிரிவு தலைவர் திரு. பிபின் எஸ். நாத் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட் (10)

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தொடரின், நேற்று அசாம் மாநிலம் குவஹாத்தியில் நடைபெற்ற, 3 ஆவது போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 3 – 0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலையில் உள்ளது. இந்த தொடரின் 4 ஆவது போட்டி வரும் புதன் கிழமை விசாகப்பட்டினத்தில் நடைபெறும்.

வதோதராவில் நடைபெறும் மகளிர் பிரிமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் ராயல் சேலஞ்சலர்ஸ் பெங்களூரு, மும்பை இந்தியன்ஸ் அணியை இன்றிரவு 7.30 மணிக்கு எதிர் கொள்கிறது.

வானிலை (6)

கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகம், புதுச்சேரி மற்றும காரைக்கால் பகுதிகளில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், நாளை முதல் வரும் 30 ஆம் தேதி வரை வறண்ட வானிலையே நிலவக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆயுஷ் (11)

புதுடெல்லி கடமைப்பாதையில் நடைபெற்ற 77 ஆவது குடியரசு தின அணிவகுப்பில் ஆயுஷ் அமைச்சகத்தின் அலங்கார ஊர்தி இடம் பெற்றது. இந்த அலங்கார ஊர்தியில் இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளை நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைத்து, காட்சி படுத்தப்பட்டிருந்தது. ஆயுஷின் தந்திரம் ஆரோக்கியத்தின் மந்திரம் என்ற கருப்பொருளை அடிப்படையாக கொண்டு இந்த அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டிருந்தது. சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு குறித்த நாட்டின் பாரம்பரிய அணுகுமுறையை பிரதிபலிப்பதாக அமைந்திருந்த இந்த ஊர்தியின் வடிவமைப்பில் ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ முறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.